[1967 ஜூலை 15

அம்பர் சர்க்கா ராட்டைகள், மாயூரம்

*370 வினா: திரு. என். கிட்டப்பா: மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

மாயூரத்தில் அம்பர் சர்க்கா ராட்டை சரிவர பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடப்பதால் அரசுக்கு ஏற்படுகிற நஷ்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசுக்கு எவ்வித நஷ்டமும் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : கோவைக்குச் சமீபத்தில் கண்ணம்பாளையத்தில் அம்பர் சர்க்கா நிலையத்தை வைத்து, அதற்காக வேண்டி ஒரு மில்லையும் ஏற்படுத்தி, அது சும்மா இருக்கிறதே, அதனால் ஏற்பட்டுவரும் நஷ்டத்திற்கு ஏதாவது விமோசனம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாயவரத்தில் இருக்கக்கூடிய அம்பர் சர்க்கா பற்றிய கேள்வியாகும் இது. கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாயவரம் டெப்போவில் உள்ள அம்பர் சர்க்காக்கள் விநியோகிக்கப்படாமல் இருக்கின்றனவே, அவற்றுக்கான விலை நமக்கு நஷ்டம் அல்லவா ? அம்பர் சர்க்கா நூற்பதைவிட பயிர்த் தொழிலில்அதிக வருவாய் வருவதனால் யாரும் அதற்கு முன்வரவில்லை. அதன் காரணமாக அம்பர் சர்க்காவை யாரும் உபயோகிக்க வில்லை என்பது தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 479 அம்பர் சர்க்காக்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றுக்கான விலை வசூலிக்கப்பட்டுவிட்டது. அங்குள்ளவர்களுக்கு வேளாண்மைத் துறையில் அதிக வருவாய் இருப்பதனால் அதைத் திருப்பிக்கொடுத்துவிட்டுப் போய் இருக்கிறார்கள்.

திரு கே. விநாயகம் : இதுபோல எந்தப் பகுதியில் அம்பர் சர்க்காவை எடுத்துக்கொள்ள யாரும் முன்வரவில்லையோ அவற்றை வேறு தேவைப் படுகிற பகுதிக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இங்குள்ள அம்பர் சர்க்காக்களுக்கு அவர்கள் விலை கொடுத்துவிட்ட காரணத்தினால், மாற்றுவது என்றாலும் அவர்கள் சம்மதத்தைப் பெற்றுத்தான் மாற்றியாகவேண்டும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : அம்பர் சர்க்கா, சர்க்கா இவை லாபகரமாக இல்லை. ஆகவே இவற்றையே நிறுத்திவிடுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அம்பர் சர்க்காவினால் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு லாபம் குறைவாகக் கிடைக்கிறது. மாநிலம் பூராவுக்கும் இது பொருந்தாது.

திரு. மா. பா. சாரதி : மாயவரத்தில் மட்டும் இல்லாமல் தமிழகம் பூராவிலும் அம்பர் சர்க்கா தேங்கி இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதனால் நன்மை இருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. பெ. சீனிவாசன் : ஆட்சி மாறிவிட்ட பிறகு மக்களிடத்தில் கதரைப் பற்றி உற்சாகம் இல்லை. ஆகவே அம்பர் சர்க்கா, சர்க்கா இவற்றை அடியோடு ஒழித்துக்கட்டுவார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மக்களுக்கு உற்சாகம் இல்லை என்பது கனம் உறுப்பினருடைய கற்பனையாக இருக்கலாம். உடனடியாக இவற்றை ஒழிப்பதற்கான எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : சாதாரண சர்க்காவைக் காட்டிலும் அம்பர் சர்க்கா பயனுடையது. அவை முறையாக விநியோகிக்கப்பட்டு, செயல்படுத்தப்படாத காரணத்தினால்தான் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே இதைச் சீராக விநியோகிக்கவும், மக்களுக்கு உற்சாகம் அளிக்க கட்டாயப் படுத்தாமல் விரும்பிக்கேட்கிற மக்களுக்கு இலவசமாகவே விநியோகிக்கவும் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றி நிச்சயமாகக் கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவு அடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(அ) பல்லடம் தொகுதியில் போலீஸ் நடவடிக்கையினால் உணவு தானியங்கள் கிடைக்காமை.

***திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதியில் கடந்த 1967 ஜூலை 7-ம் தேதி பல்லடம் தாலுகா சூலூர் சந்தைக்கு உணவுப் பொருள் (அரிசி, சோளம்) கொண்டு வந்த லைசென்சு பெற்ற வியாபாரிகளையும், விவசாயிகளையும் மேற்படி சந்தையில் உணவு தானியம் வாங்கிக்கொண்டு சென்றவர்கள் $\frac{1}{2}$ மூட்டை, $\frac{1}{4}$ மூட்டை வாங்கி வண்டியில் போட்டுக்கொண்டு போன வண்டிக்காரர்கள் மீது போலீஸார் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்.

பல்லடம் தாலுகா கட்டுப்பாடு நீக்கப்பட்ட பகுதி. அது குடும்பக் கார்டு உள்ள பகுதி. ஆனால் அரிசி போடுவதில்லை. ஆனால் அந்த மக்கள் சந்தையிலும், கடைகளிலும் தான் உணவு தானியம் வாங்க வேண்டும். இதனால் சந்தை முதலியவற்றில் உணவு தானியம் கிடைக்கவில்லை. போலீஸ் நடவடிக்கையினால் சந்தைக்கு வருகின்ற உணவு தானியம் தடைபட்டதினால் உணவுப் பொருள் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்கள்."

இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினையை விவாதிக்க இச்சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே பலமுறை சொல்லியுள்ள காரணங்களினால், இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பதற்காகப் பேரவையின் இதர அலுவல்களைத் தள்ளி வைக்கத் தேவையில்லை என்பதால், அதற்கு எனது அனுமதியைக் கொடுப்பதற்கு மறுக்கிறேன். முற்பகல் 1–00

(இ) சென்னை நகர் தீ விபத்துக்கள் பற்றி போலீஸ் துறைத் தலைவரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

At this stage of considering whether the adjournment motion is admissible or not, the Member should confine himself to explaining how the subject cames within the scope of an adjournmenta motion and not go into the details of the adjournment motion itself.

முன்னால் கொடுக்கப்பட்ட சபாநாயகருடைய தீர்ப்பை இப்பொழுது வாசித்தேன். அதன்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து how this is admissible என்பதைச் சொல்லவேண்டும்.